## சென்னை கிழக்கு மாவட்டக் கழக

# நிர்வாகிகள் - பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. சிறப்புரை!



சென்னை,ஜூன்.1-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 31.05.26 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி எண்.7.செல்லப்பா தெரு தெரு என்ற முகவரியில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர் பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர். பிரியாராஜன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி,என்.பி.எம். ஷேக் அப்துல்லா,கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார்,கே.சந்துரு, சி.மகேஷ்குமார் மாவட்ட நிர்வாகிகள்: ஜி . ம க ா தே வ ன் , புனிதவதிஎத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: எம். ச ா மி க் க ண் ணு , செ.தமிழ்வேந்தன், கூ.பி. ஜெயின், வே.வாசு, ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், DSP.ராஜகோபால், MTR நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர். பொதுக் குழு உறுப்பினர்கள்: டி.வி. செம்மொழி,சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், ஏ.பி.பூர்ணிமா, அ. நிர்மலாதேவி, எம்.இப்ராஹிம் கனி, இரா.கலைச்செல்வி,நந்தீஸ்வரன்,பி. ஸ்ரீராமுலு. சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி,க.வினோத்,பா.ஜெகதீஷ். மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

தீர்மானம்.1.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்ததற்கான காரணத்தை ஆய்வு செய்ய கழகத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழுவிற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்த பகுதி கழகச் செயலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்தும்...

தொடர்ந்து 01/06/2026 திங்கட்கிழமையன்று திருவிக நகர் சட்டமன்ற தொகுதியிலும், 05/06/2026 வெள்ளிக்கிழமையன்று வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியிலும் நடைபெறவிருக்கும் கள ஆய்விற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க உறுதி ஏற்று இக்கூட்டம் தீர்மாம் நிறைவேற்றியது.

தீர்மானம் 2

உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர், நமது உயிரினும் மேலான அன்பு தலைவர், நின்ற தேர்தலிலெல்லாம் வென்றத் தலைவர், ஓய்வுக்கே ஓய்வு கொடுத்து வங்க கடலோரம் துயில் கொள்ளும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை சென்னை கிழக்கு மாவட்டம் முழுவதும் இரு வண்ணக் கொடியேற்றியும், பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சீரும் சிறப்புமாக கொண்டாட முடிவெடுத்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

---

### கழக மகளிர் அணி சார்பில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா–

# தேர்தல் களத்தில் அயராமல் உழைத்த ‘வெல்லும் தமிழ்ப் பெண்களுக்கு’ நன்றி பாராட்டும் விழா!

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை! விஜயா தாயன்பன் ஏற்பாடு!

சென்னை, ஜூன் 1-

தி.மு.க. மகளிர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் தி.மு. கழகத்திற்காக தேர்தல் களத்தில் நின்று அயராமல் உழைத்த வெல்லும் தமிழ்ப் பெண்களுக்கு நன்றி பாராட்டும் விழா 3.6.2026 புதன்கிழமை மாலை 5 மணி அளவில் முத்தமிழ்ப் பேரவை, ராஜரத்தினம் கலையரங்கம் ஆர்.ஏ.புரம் (சத்யா ஸ்டுடியோ எதிரில்) நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இவ்விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையேற்று விழாப் பேருரை ஆற்றுகிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக செயலாளர் மயிலை த.வேலு முன்னிலை வகிக்கிறார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி, மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார், மகளிர் அணி துணைச் செயலாளர் குமரி விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் சிறப்பாக செய்துள்ளார்





